அகத்திரவிப்பால்

# தமிழ் பெண்புத்தி மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திமுறிப்பான்



பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# பெண் புத்தி மாலை

## காப்பு வெண்பா

முன்னொளி வாய்ந்த முஹம்மது றஸூல் நபியைத்
தன்னொளியினாலே சமைத்தானே - பின்னொளி போற்
பெண்புத்தி மாலை தனைப் பேசிடவே யெவ்வுயிர்க்குங்
கண்ணுற்று நிற்பவனே காப்பு

## இதுவுமது

பெண்புத்தி மாலையெனப் பேசிடவே யெவ்வுயிர்க்கு
தன்புத்தி யில்லாத் தையலரே - பெண்புத்தி
சொன்னார் முஹம்மதுஸைன் தோகையரே கண்டறிந்திங்
கெந்நாளும் வாழ்வீரிசைந்து.

## கண்ணிகள்

அல்லாஹ் வொருவனை அஞ்சி வணங்கிக்கோ மயிலே செயல்
எல்லா மவனென் றிருதயத் தெண்ணிக்கோ குயிலே
மூமினோர் முத்து முஹம்மதைப் போற்றிக்கோ மயிலே எங்கள்
ஆமினார் பெற்ற அஹ்மதென றெண்ணிக்கோ குயிலே

இல்லல்லா வென்றே இருதயம் பற்றிக்கோ மயிலே நபி
ஸல்லல்லா வென்று ஸலாவத்தை யோதிக்கோ குயிலே
காலை முலித்துக் கனிவாயுலுக்கொள்ளு மயிலே இசை
மேலோன் ரஹ்மத்து மேவி யிறக்குவான் குயிலே

விதித்த பறுலுத்தம் வேண்டித் தொழுதுக்கோ மயிலே முன்
சந்திக்க கலிமாவைக் கலபினி லோதிக்கோ குயிலே
முப்பது நோன்பையுந் தப்பாம லேபிடி மயிலே நீ
துப்புர வாகவே ஹூப்பாய் நடக்கலாம் குயிலே

ஸக்காத்தை செய்து ஸலவாத்தை ஓதடி மயிலே நாளை
சொர்க்கத்து வாழ்வுஞ் சுகம்பெறு வாயே குயிலே
பத்தாதனக்குப் பணிவிடை செய்யடி மயிலே முன்
சுத்தர் நபிமேற் கட்டுரை செய்தானே குயிலே

வெள்ளிக்கிழமை விடிய முழுகிக்கோ மயிலே தானம்
அன்ன மவர்கன்னம் புகுந்து கொடுத்தக்கோ குயிலே
மாலை மஃரிபில் மணிவிளக் கேற்றிக்கோ மயிலே இசை
மேலோன் வரிசைகள் வீட்டிலிறக்குவான் குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டை யுடுத்திப் பரிமணம் பூசிக்கோ மயிலே இன்பங்கள்
கட்டிய கொள்கைக்குக் கச்சு மிறுக்கிக்கோ குயிலே
வார்ந்து முடித்து மணங்கள் பூசிக்கோ மயிலே நீ
சேர்த்து புருஷனைச் சிந்தை மகிழ்ந்துக்கோ குயிலே

புருஷனுக்கிட்டு நீ போற்றிப்பின் னுண்ணடி மயிலே மொத்த
வரிசைகளான பரக்கத்துண்டாகுமே குயிலே
நாவைப் புரட்டி நகைப்போடு பேசாதே மயிலே நல்ல
பூவை முடித்துப் பிறர்மனை போகாதே குயிலே

கண்ணின் மையைக் கதிக்க விடாதேடி மயிலே அது
முன்னிலிருந்து முகத்தைப் பழிக்குமே குயிலே
வாசறப்படி நின்று வார்ந்து முடிக்காதே மயிலே கெட்ட
தோஷத் தனமென்று தூதர் சொன்னாரடி குயிலே

உடுத்தாடை சீப்பை ஒருவர்க்கு மீயாதே மயிலே அதில்
கொடுத்த இரணங் குறைத்த லுண்டாகுமே குயிலே
மஃரிப் நேரத்தில் வாசற் பெருக்காதே மயிலே அது
பகலிவளந்த படியைக் குறைக்குமே குயிலே

துப்புர வில்லாமற் றோழனை நெருங்காதே மயிலே அதை
முப்பது வேத மொழிந்தவர் சொன்னாரே குயிலே
பூமியதிரவே பூண்டடி வையாதே மயிலே நல்ல
நேமித்த வாழ்வும் நிறையுங் குறையுமே குயிலே

தூக்கம் பிடித்துடல் சோம்பித் திரியாதே மயிலே அது
ஏக்கம் பிடித்ததே இரணங் குறைக்குமே குயிலே
வம்பான பேச்சுக்கள் வாயி லேடுக்காதே மயிலே அதில்
துன்பங்கள் வந்து தொடர்ந்து பிடிக்குமே குயிலே

கணவனைக் கண்டால் சடுக வெழுந்திரு மயிலே நல்ல
மனையாட்டி யென்றுன்னை வாழ்த்திக் கொள்வாரடி குயிலே
காவி களிட்டுக் களித்து நகையாதே மயிலே அது
தேவடி யாட்கென்று செப்பிக் கொண்டாரடி குயிலே

கண்ணாலுறுக்கிக் கணவனைப் பாராதே மயிலே உன்னை
புண்ணாக்கி அட்டைப் பிடுங்க விடுவானே குயிலே
எளியோரைக் கண்டா லிகழ்ச்சியாகப் பேசாதே மயிலே நாளை
பழிகாரி யென்றுன்னைப் பட்டோலை தீட்டுவார் குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிர லூற்றுநீ பேணி நடந்தாக்கால் மயிலே உன்னை
ஒருவனாசை யுற்று வந்தாலழிவாயே குயிலே
அஞ்சுமோ ராறு மகத்திற் றெளிந்துக்கோ மயிலே நல்ல
இன்சொல் முஹம்மதீடேற்ற மாக்குவார் குயிலே

சற்குரு சொல்லைத் தவறாமற் கொண்டுவா மயிலே நல்ல
சொர்க்க முனக்குண்டு தூயோன் சொன்னானடி குயிலே
பூணாரமிட்டால் பிலிக்கித் திரியாதே மயிலே அது
நாணாமற் கெட்ட நடத்தைக ளல்லவே குயிலே

முக்காடு போட்டு முகமேற் பாராதே மயிலே கண்ணிற்
சொக்காடு வரென்று செப்பினது பொய்யோ குயிலே
நல்லாரை நாவில் நகைத்துப் பகையாதே மயிலே அது
பொல்லாங்கு வந்து பிழையாய் முடியுமே குயிலே

அன்னையைத் தந்தையை அன்பாய் வணங்கிக்கோ மயிலே இனிப்
பிள்ளை யுனக்குப் பெருநன்மை வேண்டுமோ குயிலே
அஞ்சிலே யொன்றை யறிவாற் றெரித்துக்கோ மயிலே நீ
நெஞ்சிலே ஒன்றை நினைக்கு முன்னமே குயிலே

புருஷன் சொற்றட்டிப் புறம்பேநீ போகாதே மயிலே நாளை
வரிசை நபிகள் மன்றாட மாட்டாரே குயிலே
புழுக்கை களென்றே இழிவாகப் பேசாதே மயிலே நல்ல
ஒழுக்கமில் லாதர் புழுக்கை களாவரே குயிலே

பொய்யுந் திருட்டும் புறமும் விடுவாயே மயிலே நீ
மெய்யும் அறிவும் விளங்கி யிருப்பாயே குயிலே
ஈயாத பாவி இருந்தென்ன போயென்ன மயிலே அந்தக்
காயா மரமெட்டி காய்த்தென்ன பூத்தென்ன குயிலே

எத்தீம்களோடு எதிராடிக் கொள்ளாதே மயிலே நாளை
பத்தினி நாச்சியார் பாவி யென்பாரடி குயிலே
கள்ளப் புருஷனை கொள்ள நினைக்காதே மயிலே உன்னை
அல்லற் கிடங்கிலழுத்தக் கவிழ்த்துவான் குயிலே

தலைவன் மொழியைநீ தட்டி நடந்தாக்கால் மயிலே நாளை
கொலைபாவி யென்றுன்னை குழியுள் நெருக்குமே குயிலே
ஆனுளக்குந்தன் அழகெல்லாம் காட்டிக்கோ மயிலே நாளை
வாழுமவ் வாழ்வுக்கு வல்லோ னுரைத்தானே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவி யருமையைத் துரோகி யறிவானோ மயிலே நாளை
கணவ னருமையைக் கன்னி யறிவாளோ குயிலே
ஏழை குடிகெடுத் தெப்படி வாழலாம் மயிலே பின்னும்
நாளைக் கிருப்பது நாமறி யோமடி குயிலே

சத்திய மென்று தலையிலடியாதே மயிலே அது
குற்றம் தானாகி கொலைவந்து சேருமே குயிலே
உப்பிட்ட பேர்களை யுள்ளத்தி லெண்ணிக்கோ மயிலே நிறை
துப்பட்டி யிட்டு நீ சூதாகப் பாராதே குயிலே

தாயாரைப் போலச் சரியாய் நடந்தாக்கால் மயிலே நல்ல
நாயகி யென்றிந்த நானிலஞ் சொல்லுமே குயிலே
தோளுந் தலையுந் திறந்துநீ திரியாதே மயிலே நாளை
தேளுடன் பாம்பும் திகைக்கப் பிடுங்குமே குயிலே

திரேகங்கள சையக் குலுங்கி நடக்காதே மயிலே நாளை
பங்க நரகில் பழிஹத்தில் ஆகுவாய் குயிலே
பாஷைகள் சொல்லிப் பகட்டித் திரியாதே மயிலே நாளை
வேசையர் சொல்லி மிரட்டுத் தொழிலடி குயிலே

மாய மருந்துகள் மனதாரச் செய்யாதே மயிலே நாளை
நாய்போற் கதரி நரகிற் தவிப்பாயே குயிலே
என்றைக் கிருந்தாலும் மண்ணுக் கிரையடி மயிலே கைப்
புண்ணுக்குக் கண்ணாடி போட்டேனோ பார்க்கனும் குயிலே

வெள்ளை யுடுத்திக் கைவீசி நடக்காதே மயிலே பொல்லாக்
கன்னியென்றுன்னைக் கலங்கப்படுத்தவார் குயிலே
மாறாட்டமாக மதிமோகஞ் செய்யாதே மயிலே மொத்தப்
போராட்டமான பிழை வந்து நேரிடும் குயிலே

கள்ளத் தனமும் ஹராம் ஸினா எதுக்கு மயிலே நான்
உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் நோகுதே குயிலே
மணமிருக்க மறுமணம் வேண்டுமோ மயிலே சொந்தக்
கணவனிருக்க ஹராம் செய்ய வேண்டுமா குயிலே

போரிட்டு ஊரார் புறங்களைப் பேசாதே மயிலே அது
நீர்விட்டு இவ்விடம் நீயும் அனைவாயே குயிலே
ஜாலங்கள் பேசித் தூரமாய்த் திரியாதே மயிலே நாளைக்
கோர நரகிற் கொடூரங்கள் செய்வானே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டோனிருக்கக் குலைந்தானை எட்டிட்டால் மயிலே அது
விரண்டோடவேதான் விழியிலடிப்பானே குயிலே
பொன்னுக் கிசைந்து புரட்டுகள் செய்யாதே மயிலே அதில்
பின்னுக் குனக்குப் பெரும்பிழை ரொம்பவே குயிலே

கற்றோர் சொல்லைக் கருத்தென் றறிந்துக்கோ மயிலே அருள்
பெற்றோர்க ளென்று பிரபல மாகுமே குயிலே
நேர்ந்த கடன்செய்ய நீ போகலாகாதே மயிலே போனால்
வேந்தன் லஃணத்து மேனி இறக்குவான் குயிலே

கொட்டும் பிராமணர்க் கோலங்க ளேதுக்கு மயிலே நாளைப்
பொட்டிட வேண்டுமோ பொன்னின் குடத்துக்கு குயிலே
பெரியோர்கள் சொல்லை நீபேணி நடவடி மயிலே அப்பால்
அரிய சுவர்க்கமும் அழுகும் பெறுவாயே குயிலே

தாய் சொல்லும் வார்த்தையை தட்டி நடந்தாக்கால் மயிலே நீ
நாய்போ லலறி நரகிற் கிடப்பாயே குயிலே
கோள்கள் சொல்லிக் குடியைக் கெடுக்காதே மயிலே நாளைப்
பாழும் நரகிற் பாம்பு பிடங்குமே குயிலே

தாழான்மை பேசித் தரையில் கவிழாதே மயிலே நெடுங்
கோடாரிக் கொம்பு குலத்துக்குக் கேடல்லவோ குயிலே
வெறுத்துக் கணவனை வேறாக வெண்ணினால் மயிலே பூவில்
பருத்தி படும்பாடு பட்டழிவாயடி குயிலே

மிஸ்மிக்காலிட்டுநீ மேலாயிருந்துக்கோ மயிலே பொல்லாத்
துஷ்மனெல்லாம் வெகு தூராகி நிற்குமே குயிலே
மாயங்களான மயக்கத்தைத் தள்ளடி மயிலே நல்ல
நாயகம் தந்த நடத்தையைக் கொள்ளடி குயிலே

விண்ணுக் கழகாக வீசும் நிலாவொளி மயிலே நல்லப்
பெண்ணுக் கழகுதான் பேசாதிருப்பது குயிலே
வெள்ளியுந் திங்களும் வீனிலழுகாதே மயிலே நாளைக்
கொள்ளி நரகிற் கொதிக்க அடிப்பானே குயிலே

அயலார் புருஷர் மேல் ஆசை வையாதே மயிலே பொல்லா
மையான பேச்சுக்கள் வாயிலெடுக்காதே குயிலே
வாய்க்குற்றம் விட்டால் வரிசை யுனக்கடி மயிலே முத்து
மூக்குத்தியிட்டால் முகத்தக்கழகடி குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைச் சொல்லி உலகத்தில வாழடி மயிலே கெட்ட
 தின்மைக ளெல்லாம் தீர்ந்தோடிப் போகுமே குயிலே
சுன்னத்து நோன்பு தொழுகை மறக்காதே மயிலே நல்ல
 ஜன்னத்து வாசற் திறந்துக் கொடுக்குமே குயிலே

பொல்லாத பேச்சுக்கும் போகவுமாகாது மயிலே நீ
 இல்லாத பேச்சை யெடுக்கவுமாகாதே குயிலே
பெரியோரைக் கண்டிடில் பேணி நடந்துக்கோ மயிலே நல்ல
 அறிவாளர் வந்திடில் அஞ்சி நடந்துக்கோ குயிலே

பின்புத்தி யாலேநீ வெட்கத்தை விட்டாக்கால் மயிலே அது
 பெண்புத்தி கொஞ்சமாய்ப் பேசிக் கொண்டாரடி குயிலே
கணவன் மொழிக்குநீ கசடாகப் பேசாதே மயிலே நாளை
 பிணமாய் நரகிற் புழுவாய்ப் புரளுவாய் குயிலே

வெளியில் மிழுக விரைந்து வையாதே மயிலே நாளைக்
 குழியினிற் பாம்பு குழலிற் பிடுங்குமே குயிலே
கவரை யிடத்தி நீ கையைக் கொடுக்காதே மயிலே நாளைத்
 துவரை யடித்தாற்போல் தூக்கியடிப்பாரே குயிலே

மஞ்சள் குளித்து வருவார்முன் நில்லாதே மயிலே நீ
 கொஞ்சிக் கணவனைக் கூடிக்குலாவிக்கோ குயிலே
கள்ள ஹராமில் கடுஞ்சூலு மாவதேன் மயிலே அந்தப்
 பிள்ளையைத் தள்ளிப் பெரும்பாவம் கொள்வதேன் குயிலே

கருவை யறுத்தே யுருவங் குலைந்தாக்கால் மயிலே உந்தன்
 கரும நரகிற் சுடுவார் கெடுவாயே குயிலே
துன்ப ஸினாவிற் தொடர்ந்து சூலானாலே மயிலே
 ஒன்பது வாசலுதிரஞ்சீலோடுமே குயிலே

இரத்தமுஞ் சீழும் நெருப்பாக வாரியே மயிலே அப்போ
 கர்த்தன் மலக்குகள் கதற லடிப்பாரே குயிலே
வாரிக் கொடுத்து மதிகெட்டு வந்திடில் மயிலே நாளை
 ஒரிப்போல் வாய்விட்ட ளரிக்கிடப்பாயே குயிலே

ஆகாத சொல்லை யறிவென் றெடுக்காதே மயிலே நீதான்
 போகாத இடத்துக்குப் போகவுமாகாதே குயிலே
வீம்பாகப் பேசி அதபைக் கெடுக்காதே மயிலே நாளை
 துன்ப நரகில் நாய் கிளரிப் பிடங்கும் குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிகள் வாங்கி வயிறு வளர்க்காதே மயிலே நாளை
வெட்டிச் சதையை விழுங்க அடிப்பானே குயிலே
ஆருக்கும் பொல்லாத பெரும்பிழை செய்யாதே மயிலே இந்தப்
பாருக்குள் உன்னைப் போல் பாக்கிய ரில்லையே குயிலே

ஆஷுரா நோன்பை அதாவாகப் பிடியடி மயிலே நாளை
வேசாற விட்டு நீ விஸ்தி பெறுவாயே குயிலே
நெஞ்சறியப் பொய்யை நிகரென்று சொல்லாதே மயிலே சூழ்ந்த
பஞ்சுபோல் ஈமான் பறந்து விடுமடி குயிலே

சுன்னத்து நோன்பைத் தொடர்ந்து பிடியடி மயிலே நாளை
ஆபத்துனக்கு அகன்றுபோய் நீங்குமே குயிலே
ஒக்கப் பிறந்தாரை ஊதாரி கொள்ளாதே மயிலே அவர்
கொக்கு போலாகத் திரிந்தலைவாயே குயிலே

பெண்புத்தி யாலே பிறர் முகம் பார்த்தாயே மயிலே நீ
தன்புத்தி யாலல்லோ தாழ்வு பட்டாயடி குயிலே
அறிவாளர் சொல்லை அசடாக எண்ணாதே மயிலே நல்ல
குறியாகத் கேட்டு குணமாய் நடந்துக்கோ குயிலே

அஞ்செழுத் துள்ளே யறிவேது சொல்லடி மயிலே அதைப்
பிஞ்செலுத்தாகவே பேசும் பிரானெடி குயிலே
மெய்க்குரு பாதம் விளம்பிப் பிடியிடி மயிலே மற்ற
பொய்குருவைச் சேரில் பிழைதான் வருமடி குயிலே

வெறுத்தாக்கால் மூன்றுநாள் வீடுற வாடிக்கோ மயிலே அது
பொறுத்தர சாண்ட புகழ்நபி சொன்னாரே குயிலே
ஊராரைப் பார்த்து நீ யுள்ள மெரியாதே மயிலே அணு
வோறவே கெடும் வசனமறியாதே குயிலே

உற்றாரைச் சேர்த்துநீ யுறவுங் கொண்டாடிக்கோ மயிலே மனம்
எத்தாவே வாழவா மொத்தாலே வாழலாம் குயிலே
உன்னாசை கொண்டே உருகிக் கரைந்தாரே மயிலே அடி
என்னாசை யுன்னையு மேன்தான் கெடுத்தது குயிலே

கொண்டவ னுக்குநீ ரெண்டகம் பண்ணினால் மயிலே நீ
கண்டவனுக் கெல்லாம் பெண்டாயிருப்பாயே குயிலே
பொறுமை யருமையும் புத்தியும் தேடிக்கோ மயிலே கொடிய
வறுமை சிறுமை கவலையுந் தள்ளடி குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் பெரியோரைக் கூடிக் கொண்டாடிக்கோ பூவால்
நாறும் மணம்பெற்ற ஞாயமறி யாயோ குயிலே
ஈன்றவர் சிந்தை யெரியநீ பேசாதே மயிலே நாளை
தூண்டி லகப்பட்ட மீன்போ லலைவாயே குயிலே

கலைப்பான பேச்சை கருத்தாக வெண்ணாதே மயிலே. வேடன்
வலையிலகப்பட்ட மான்போல் விழிப்பாயே குயிலே
விதியினால் வாழுவார் மேதினியிலுள்ளார் மயிலே நம்
மதியினால் வாழும் வல்லமை யில்லையே குயிலே

ஈமானை நெஞ்சி லிருதயம் பண்ணிக்கோ மயிலே நம்மை
சீமான் நபிதஞ் சேர்த்தல்லோ கொள்ளலாம் குயிலே
தீன்னென்னும் வேதத்தை சிந்தையில் மறவாதே மயிலே நல்ல
வானகப் பெண்ணுடன் வாழ்ந்திருப்பாயே குயிலே

கத்தர் முஹம்மதைக் கண்டுக்கொண் டாடிக்கோ மயிலே நல்ல
சொர்க்கத்து ஹுறுல்லீன் தோழமை யாகுவாய் குயிலே
ஆசைக்குத் தேடி யறிந்து தெரிந்துக்கோ மயிலே நல்ல
மாசக் கென்றுன்னை வகுத்து வைத்தான்டி குயிலே

கத்தர் நபியைக் கனவிலு மறவாதே மயிலே நாளை
முத்து முஹம்மது மோட்சத்தி லாக்குவார் குயிலே
அகத்துக் கவலையை அப்புறந் தள்ளடி மயிலே உந்தன்
முகத்தினி லுள்ள முஸீபத்து நீங்குமே குயிலே

பந்த மிருந்தாக்கால் பாக்கிய முண்டடி மயிலே நல்ல
சந்த மிருந்தாக்கால் சாதங் கிடைக்குமே குயிலே
சூதை விரும்பிச் சுகங்களைக் காட்டாதே மயிலே அது
பாதகமென்று பயகம்பர் சொன்னாரே குயிலே

திட்டாதே வாயினாற் தின்னாதே பரக்கிலை மயிலே தின்றால்
மீத்தவ ளுந்தன் முகத்தை விட்டேகாளோ குயிலே
மாமி தனக்கு மரியாதை செய்யடி மயிலே உந்தன்
மாமோக மாசை கணவனைப் பெற்றாயே குயிலே

அஞ்சாத்தனிவழி நெஞ்சாரப் போகாதே மயிலே போனாற்
சஞ்சலப் பட்டுத் தழல்மெழு காவாயே குயிலே
முறிவினை பேசி முகத்தை முறியாதே மயிலே நாளை
இருதலைக் கொள்ளி யெறும்பு கடிக்குமே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனியாயங்க கண்டு அரும்பிழை செய்யாதே மயிலே நாளை
அருமைக் குலைந்து ஆவேசங் கொள்வாயே குயிலே
பிள்ளையைத் திட்டிப் பெரும்பாவங்கொள்ளாதே மயிலே அது
உள்ள மகிழ்ந்துநீ ஊதாரி யாவாயே குயிலே

முக்காட்டுப் பெண்ணுக்கு மூக்கிற் கோபமேன்மயிலே அது
மற்காட்டு முந்தன் கணவனுக்கு காகாதே குயிலே
இசை ராகம் கேட்டுநீ இன்பங் கொள்ளாதடி மயிலே நாளைக்
கசையான செப்பூசி காதி லிடுவாரே குயிலே

கட்டுங் கணவனை விட்டுப் பிரியாதே மயிலே விட்டால்
நட்டாற்றுக் கீரைபோற் கெட்டலைவாயடி குயிலே
உந்தன் கணவனுக் குச்சதி செய்யாதே மயிலே நீ
வெந்து நரகில் விசனப் படுவாயே குயிலே

ஏழைப் புருஷனென் றெள்ளலாய்ப் பேசாதே மயிலே நாளை
வாளைக் கொண்டுன்னாவை வகிர்ந்து பிளப்பாரே குயிலே
குபிரான சாஸ்திரக் குறிவைத்துப் பாராதே மயிலே அதனால்
தவறான ஈமான் கருதிப் பறக்குமே குயிலே

புறுக்கானை நெஞ்சிற் பிழையாக வெண்ணாதே மயிலே உன்னில்
ஒருகாலுமே சொர்க்க முற்றிட மாட்டாயே குயிலே
பணங்களைத் தேடிப் பாரிற் புதையாதே மயிலே நாளை
பிணந்தனிற் பாம்பு போட்டு புரட்டுமே குயிலே

சொக்கட்டான் கோழி சுகமென்றே ஆடாதே மயிலே அது
இக்கட்டுப் போலே இடர்கூற லாகுமே குயிலே
குட்டிநீ யாகவே கூட்டிக் கொடுக்காதே மயிலே நாளை
கட்டி நெருப்பாலே காய்ச்சிப் பிடுங்குவார் குயிலே

பத்தினி மாதரைப் பழிசொல் சொல்லாதே மயிலே
பெற்றிடும் பெண்ணுக்குப் பின்னால் குறைவரும் குயிலே
நி°மத் துள்ளானை நினைவில் வணங்கிக்கோ மயிலே அதனால்
கியாமத்து நாள் நல்ல கீர்த்தி பெறுவாயே குயிலே

புண்ணியஞ் செய்துநீ பூவினில் வாழ்ந்தாக்கால் மயிலே உன்
எண்ணிய எண்ணங்க லெல்லாம் பலிக்குமே குயிலே
வீரியம் பாராட்டி மேனி பாழாக்காதே மயிலே நல்ல
காரியம் பாராட்டிக் காசினி போற்றுமே குயிலே

தொட்ட கணவனைத் தோஷஞ் செய்யாதே மயிலே நீ
குஷ்டம் பிடித்துக் குறை நோய்கள் கொள்வாயே குயிலே
உள்ளதைச் சொல்வாரை ஊதாரி சொல்லாதே மயிலே அது
பள்ளித்தில் வெள்ளம் பறந்தோடி நிற்காதே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதாக்கள் செய்த முறைப்படி செய்துக்கோ மயிலே அது
மாதாக்கள் செய்தது மக்களுக் கல்லவோ குயிலே
முனாபிக்கு சொல்லி முறுவிக் கொள்ளாதே மயிலே சொல்லி
.பனாவாகி நீயும் படும்பாடு மெத்தவே குயிலே

மண்ணிற் பிறந்தார்க்கு வல்லமை இல்லையே மயிலே அதில்
பெண்ணாய்ப் பிறந்தார்க்கும் பெருமை யுண்டோடி குயிலே
உண்மையைத் தேடி ஒழுங்காய் நடந்தாக்கால் மயிலே செய்த
நன்மையுந் தீமையும் நாயனறிவானே குயிலே

பணத்துக் கோரம்புநீ பாரில் இசையாதே மயிலே அவர்
இரணத்துக் கவிழ்தங் கொடுத்தாலுந் தீராதே குயிலே
பெண்ணாக வேயர்ரும் பிரபலம் பேசுவார் மயிலே அதில்
மண்ணும் பெண்ணென்றும் வகுத்தறியாயோ குயிலே

முரீதுகள் வாங்கி முடுக்கி லடுக்காதே மயிலே அதைத்
தெரிந்துநீ சிந்தையில் தேடக்கடனடி குயிலே
அஞ்சனுதித்து நீ அஞ்ஞற் பிறந்தாயே மயிலே அந்த
அஞ்சில் வளர்த்து நீ அஞ்சு மறியாயோ குயிலே

அலிபோடு லாமுடன் அருள்ஹே மீமுடன் மயிலே நீ
மெலியாதே நாவில் விடுத்ததை விண்டுக்கோ குயிலே
கலிமாவை மூலக் கருத்தோ டிருத்தினால் மயிலே அங்கே
புலிமாமனார் திருப் பொற்பாதம் காண்பாயே குயிலே

அஞ்சையுங் கட்டி யறிவோ டிறுக்கினால் மயிலே பொல்லா
வஞ்சனைப் போக்கி வாப்பாடும் ஆவாரே குயிலே
மூச்சு விளைந்த மூலத்தைப் பாராடி மயிலே அங்கே
பேச்சு விளைந்த பிரபலம் காண்பாயே குயிலே

மூலத்தின் மேலே முழுத் தாமரையடி மயிலே அதில்
வாலைப் பெண்ணான மனோன்மணி நிற்பானே குயிலே

விண்ணோடி யோடி வெளித்திரை நீங்கினால் மயிலே கடல்
கண்ணாடிக் குள்ளொரு காரணம் காணுமே மயிலே
இருகண் ணிமையில் இருதயம் பூட்டினால் மயிலே அதிற்
சுரூபம் நடுவிற் தொடர்ந்து நின்றாடுமே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்துக் கண்ணை முருக்கித் திருத்தினால் மயிலே உங்கள்
அகத்துக் கண்கீரி யறிவங்கே காண்பாயே குயிலே
இல்லலாஹு என்றிருதயம் வைத்தாக்கால் மயிலே இனி
அல்லாஹு தீதாரனுதினம் காண்பாயே குயிலே

செம்மலர்க் குள்ளே சிறந்தெட்டி பாரடி மயிலே அங்கே
நன்மையால் பாத்திமா நாயகி நிற்பாரே குயிலே
சத்தம் பிறந்த தலமெது சொல்லடி மயிலே அது
பத்தி லிரண்டு பலநாளும் காண்பாயே குயிலே

எனக்குள் நீயென்று உனக்குள் நானென்று மயிலே அது
தனக்குள் தானாய்ச் சமைந்த தறியாயோ குயிலே
நினைவு மனமே நேராக நின்றாக்கால் மயிலே கண்ட
கனவெல்லாம் உனக்குக் கைவசமாகுமே குயிலே

சற்று மனது சருகாமல் நின்றாக்கால் மயிலே அதில்
கர்த்தனும் வந்து கலந்தல்லோ பேசுவான் குயிலே
ஊணை யொடுக்கி ஒருநினை வானாக்கால் மயிலே நீயும்
காணாக் காட்சிகள் கண்டு மகிழ்வாயே குயிலே

இந்தப் பிறவி இகழ்ந்துநீ பாரடி மயிலே அந்த
சொந்தந் பிறவி துரந்தல்லோ தோன்றுங்காண் குயிலே
நித்திரை தள்ளி நினைவும் கனவாகும் மயிலே பின்னும்
உற்று முழித்தே யுதித்தார் சொல்லடி குயிலே

கனவி லுருக்கொண்டே காரணங் கேட்டாயோ மயிலே நம்ம
நினைவிலும் நீரும் நினைக்காதிருந்தாக்கால் குயிலே
கண்டுநினைக்கக் கருத்துறப் பேசினால் மயிலே அருள்
எண்டு முனங்கிக் கிடையூறு வாராதே மயிலே

அர்ஷின்கீழ் நின்றே யறிவுநீ பாரடி மயிலே நாயகன்
முர்ஷினிற் சத்தம் ஹுவென்று கேட்குமே குயிலே

சத்தத்தைக் கேட்டு தயங்காமல் நில்லடி மயிலே அங்கே
கர்த்தன் முஹம்மதைக் கல்புறக் காண்பாயே குயிலே
மேல்வாசி யேறி விளைத்த தலம் கண்டாலே மயிலே ஈராறு
கால்வாசி யேறி கணகதி சேர்வாயே குயிலே

கழிமுனை யேறித் துருவம் கடந்தாக்கால் மயிலே அங்கே
வெளிகளை நாலும் விலையாடி நிற்கும் குயிலே
நாலும் பிறந்த நடுவை யறிந்தாக்கால் மயிலே நல்ல
பாலுங் குடித்துப் பயனும் தெளிவாயே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ற இடத்தில் அணுவும் நீ யானக்கால் மயிலே நீ
உற்ற இடத்தில் ஒருவருமில்லையே குயிலே
மாயப் பிறவி மயக்கத்தைத் தள்ளடி மயிலே நல்ல
காயா புரியுந்தன் கைவசமாகுதே குயிலே

மட்டத்துக் குள்ளே மதியைத் திருத்தடி மயிலே திரு
தட்டத்துக் குள்ளே மதிமுகந் தோன்றுமே குயிலே
வெண்ணெயைக் குவித்து விளக்கா லுருக்கினால் மயிலே அது
உன்னை யல்லாம லொருவர்க்கு மில்லையே குயிலே

மேலோனும் நீயும் வினவித் தனதானால் மயிலே உயிர்
காலனார் வாங்கவும் கட்டளை இல்லையே குயிலே
இளமைப் பருவத்தி லெண்ணிற் தெரியாவிட்டால் மயிலே பின்பு
தளர்ந்த பருவத்தில் தள்ளாடி நிற்பாயே குயிலே

வாலை வயதில் முரீதுக்கள் வேண்டிக்கோ மயிலே அதில்
காலமறிந்து இறைவனைத் தேடிக்கோ குயிலே
மாண்டிடும்போது முரீதுகள்தனை யறியாவிட்டால் மயிலே அது
மக்க முஹம்மது மன்றாட்ட மில்லையே குயிலே

அங்கமிருக்கையில் எங்குமுலாவலாம் மயிலே தங்கள்
அங்குமுடைந்தாக்கால் தங்குவ தெங்கேடி குயிலே
மந்திரத்தாலு மெழுத்தாலு மாகுமோ மயிலே இந்த
தந்திரப் பேச்சைத் தரையினிற் றல்லடி குயிலே

மவுன மெழுந்து மனமும் சரியிட்டால் மயிலே நீ
சுவன பதிக்கும் துரைத்தன பெண்ணடி குயிலே
பூதலந் தன்னிலே பொய்க்குரு வானவர் மயிலே இரு
காதையு மூடியே கண்ணையு மேலேற்றுவார் குயிலே

உன்னைப் பிடிக்க வுபாய மறியாமல் மயிலே இரு
கண்ணைச் சிமிட்டிக் கடும் பார்வை காட்டுவார் குயிலே

மாடுபோ லுண்டு மயக்கமாய்த் தூங்குவார் மயிலே இது
கேடென் றவர்கள் கனவிலு மெண்ணாரே குயிலே
பழித்துப் பெரியோரைப் பாராம லேசுவார் மயிலே அந்த
வெளிச்சத்தைக் காட்டுவேன் வீட்டிலே வாவென்பார் குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்ச மில்லாமற் குபாயங்க ளாகவே மயிலே அங்கை
பழித்திடும் செம்பொன் பறிக்கவே தேடுவார் குயிலே
சண்டாளப் பேரைச் சதமென் றெடுக்காதே மயிலே அவன்
பெண்டன் வுன்மேற் பிரியப்படுவாரே குயிலே

முரீது கொடுப்பார்க்கு மூன்று குணமுண்டு மயிலே அதைத்
தெரிந்தாரைப் பார்த்துத் திருவடி போற்றிக்கோ குயிலே
இன்பங்கள் வந்தா லிதமென் றெடுக்கார்கள் மயிலே அவர்
துன்பங்கள் வந்தால் ஷுக்று செய்வாரடி குயிலே

தானென்ற ஆணவம் நாட்டிலே பேசாதே மயிலே எல்லாந்
தானென்று கொண்டவர் சற்குரு வல்லவோ குயிலே
வாக்கினி லொன்று மனதினி லொன்று பேசாதே மயிலே நாளை
நாக்கினில் தூண்டுகள் நாட்டியே தூக்குவார் குயிலே

மனையிற் குறுஞ்செட்டு மக்களுக் காகவே மயிலே பொல்லா
வினையில் வருங்கேடு வேண்டவும் பேசாதே குயிலே
களறி விம்பையில் கண்ணோரம் பாராதே மயிலே நாளை
குளறியே கண்களைக் கீறி எடுப்பாரே குயிலே

வீணான பேச்சுக்கு வாணாளை மாய்க்காதே மயிலே கண்ணில்
காணாப் பிறைக்குநீ கையேந்தி நில்லாதே குயிலே
சண்டைகளிட்டுச் சபைதனில் பேசாதே மயிலே அது
கொண்டவனுக் கறிவாண்மை குறைக்குமே குயிலே

இந்தா பிடியென் றெடுத்துக் கொடுக்காதே மயிலே முன்னிற்
சொந்தக் கணவனைத் தோற்றத் தறியாயோ குயிலே
சூலாகி மொத்தவுந் தூர நடக்காதே மயிலே செய்த
கூலி குறைத்துக் குறைவு கொள்ளாதே குயிலே

சற்குருவா னோரைச் சார்ந்துப் பணிந்தாக்கால் மயிலே அவர்
மெய்குரு வான இடமல்லோ காண்பிப்பார் குயிலே
நல்லாரைச் சேர்நதாக்கால் நடக்கையும் நல்லதாம் மயிலே கெட்ட
பொல்லாரைச் சேர்ந்தாக்கால் புத்தியும் போகுமே குயிலே

விண்ணாகி மண்ணாகி வெளியு மொழியுமாகி மயிலே அது
அண்ணாகி இண்ணாகி பறுலா ருந்தாலும் குயிலே
தாயாகித் தமராகித் தக்கதோர் பிறப்பாகி மயிலே பெற்ற
சேயாகி யுடலாகிச் செகத்திற் பிறந்ததாம் குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனந்தானே இத்தனை மகத்துவ மானது மயிலே அந்த
இனந்தா னறியாம லேன் சும்மா பேசுறாய் குயிலே
நீருள்ள மட்டும் மீனங்கே துள்ளிடும் மயிலே அந்த
நீரங்கே யற்றாக்கால் மீனங்கே துள்ளிடும் மயிலே

மனமுள்ள மட்டும் வல்லமைப் பேசுவாய் மயிலே இந்த
மனமு மொடுங்கினால் நினைவெங்கிருக்குமோ குயிலே
மவுத்தைத் தடுக்குமுன் மவுத்தாகப் பாரடி மயிலே காலன்
மவுத்தை மறந்தாக்கால் கைசேதப் படுவாயே குயிலே

பிரியுமுன் பிரிந்தாலோ விதம் வெளியாகும் மயிலே தன்னைத்
தெரியுமுன் னிறந்தாக்கால் தேறுவதெங்னே குயிலே
கொஞ்சிய வாழ்வுங் குலாவும் பலனெல்லாம் மயிலே கெட்ட
வஞ்சிதென் றென்னி யுன்பகு மனதால் பார் குயிலே

பெண்ணாசை விட்டு நீ பேணி நடந்தாக்கால் மயிலே கெட்ட
கன்னாசு வந்தால் காலாலுதைப்பாயே குயிலே
இல்லல்லாஹ் தன்னை அகத்தி லறியாவிட்டால் மயிலே நீ
பொல்லா நரகிற் புகுவது மெய்யடி குயிலே

பார்த்து முரீதைப் பருவத்திற் தேடிக்கோ மயிலே நீ
நூற்றுக் கிருக்கவுஞ் சீட்டுமுண்டோ சொல்லுங் குயிலே
ஈரஞ்சு கூடு மிளந்தைப் பருவத்தில் மயிலே நீ
ஓரஞ்சு தேடி யுனக்குக் கடனடி குயிலே .

பூவிலே வாசம் பிறந்த விதமென்ன மயிலே கலி
மாவிலே ஈமான் கலந்த விதமென்ன குயிலே
கல்லில் நெருப்புக் கலந்த விதமென்ன மயிலே இருள்
அல்லிற் பகலமைந்த விடமல்லோ குயிலே

தன்னை யறிந்து தரிபாட்டி லானாக்கால் மயிலே அங்கே
சொன்ன வழியெல்லாம் சோதிபோல் தோணுமே குயிலே
மெத்தப் புசிப்பாலே மேனிச் சுகத்தாலே மயிலே மையல்
நித்திரையாலே நினைவை மறந்தாயே குயிலே

நித்திரைவிட்டு நினைவோ டிருந்தால் மயிலே இறை
முத்தியைப் பெற்று முஹம்மதைக் காணலாம் குயிலே
மூலப்பதியின் முளைத்த விதமென்ன மயிலே அது
வேலைப்பதியில் வெளி கண்டு நோற்றுமே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.தோற்று மொளைவை தொடர்ந்துநீ கண்டாக்கால் மயிலே சொல்லால்
வேற்றுமை யென்றும் விளைக்கவு மாட்டாயே குயிலே
முத்தொன்றினாலே முழுதும் படைத்தானே மயிலே ஒரு
வித்தொன்றினாலே வினவத் தெளியடி குயிலே

ஐயனெனு மட்கரங் கண்டு தெளியாவிட்டால் மயிலே சுடர்த்
துயிலெனுங் கண்ணாடி தோற்றவு மாட்டாதே குயிலே
குவிந்து விரிந்து உப்பை யறிந்தாக்கால் மயிலே முகம்
நிமிர்ந்து குடித்து நெறியும் பெறுவாயே குயிலே

பூரணமுண்டான யாதையைக் கண்டாக்கால் மயிலே வெகு
காரணங் கண்டு காட்சி பெறுவாயே குயிலே
சூதக முற்றிச் சுரூபங் கடந்தாக்கால் மயிலே பின்னுஞ்
சூதவி மூன்றாலே சோதி தெரியுமே குயிலே

வேண்டிக் கல்வி வெறி கொண்ட நாய்போலே மயிலே நீ
யுண்டலை இரத்தம் புசிக்கக் கொடுத்தாயே குயிலே
பேதை யமிர்தம் புசிக்கத் தெரியாமல் மயிலே நீ
சூதகமுன் டீமான் சுத்த மிழந்தாயே மயிலே

பாதகர் சொல்லைப் பலனென்றுக் கொள்ளாதே மயிலே பொல்லா
நாதங் குடித்து நரகி லமிழாலே குயிலே
உண்ணாகை நாக்கை யுள்ளால் உணர்ந்தாக்கால் மயிலே மதி
அண்ணாக்கி லூறும் அமிர்தம் குடிப்பாயே குயிலே

பாலைக் குடித்தருள் பாக்கியம் பெற்றாக்கால் மயிலே நல்ல
வாலைப் பருவ வயதுனக் கில்லையோ குயிலே
மூளையைப் பற்றி நினைவு மயங்குமே மயிலே நீ
சூழவளைந்து துறந்துக்கோ ஞானத்தாற் குயிலே

ஊசியிற் காந்தம் உருகிப் பிடித்தாற்போல் மயிலே நீ
தேசியைப் பற்றித் திரிலோகம் பாரடி குயிலே
மக்க முஹம்மது வாசலுக்குள் சென்றாக்கால் மயிலே சுகன
சொர்க்க மர்ஷும் குர்ஷுந் துலங்குமே குயிலே

அருகினில் மாயன் கொலுவங்கு தோன்றினால் மயிலே நல்ல
தெரிசனைக் கண்டு திருவடிப் போற்றிக்கோ குயிலே
முச்சந்திக்குள்ளே முனைப்பாரி விட்டாக்கால் மயிலே இறை
தற்சொரூ பத்தைநீ சார்ந்துக் கொள்வாயடி குயிலே

கைவசமாகக் கருத்தொடு நாடினால் மயிலே இனி
ஐவருமே கூடி அறிவு புரிவாரே குயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சல வாழ்வை சதமென்றிங் கெண்ணாதே மயிலே இது
கொஞ்சமென் றெண்ணிக் குருவைத் தெரிந்துக்கோ குயிலே
மக்களும் பெண்ணும் மனைவி யுடைமையில் மயிலே நாளைத்
தக்கமென் றெண்ணிநீ தன்னை மறந்தாயே குயிலே

திரியுஞ் சடத்தைத் தெண்டித்துப் பாராட்டாமல் மயிலே நாளைப்
பிரியும் பொழுதுமே பேதையாய் முழிப்பாயே குயிலே
மஃரிபத் தான் வழிகண்டு நில்லடி மயிலே பொல்லாக்
கருமமெது வெல்லாம் கசடென்றே தள்ளடி குயிலே

புருஷ னிடத்தில் பெண்சாதிக்குச் சொர்க்கமே மயிலே இறை
அர்ஷிற் பெரியோன் அஹமதுக் கோதினான் குயிலே
நத்துங் கணவனுக்கேற்ப நடந்தாக்கால் மயிலே கெஞ்சிக்
கர்த்தன் முஹம்மதைக் கண்ணாலே காண்பாயே குயிலே

அஞ்சித் தெளிந்தே யறிவால் வணங்கினால் மயிலே நாளைக்
கொஞ்சியே சொர்க்கத்திலே கூடிக் குலாவலாம் குயிலே
நத்துங் கணவனுக்கேற்ப நடந்தாக்கால் மயிலே நாளைக்
கர்த்தன் நபி மகள் சாட்சி பெறுவாயே குயிலே

வழியோ டறிந்து மகிழ்ந்து நடந்தாக்கால் மயிலே நீ
அழியாப் பதியில் அரசாண்டிருப்பாயே குயிலே
பத்திமானா னாக்கால் இத்தனை போதாதே மயிலே நீதான்
ஒத்து நடந்தாக்கால் இத்தனை சொல்வதேன் குயிலே

பெண் புத்தி மாலையைப் பேணி நடந்தாக்கால் மயிலே நீ
விண்ணுற்று ஜன்மத்தில் வீற்றிருப்பாயடி குயிலே
அன்ன நடையாளே மின்னி னொளியாலே நீ
எந்நாளுஞ் சொர்க்கத்தில் இன்பமாய் வாழ்வாயே குயிலே

மங்களமாகவே எங்கள் முஹம்மது வாழி நல்ல
சங்கை நபிமகள் பாத்திமா நாயகி வாழி
நாலியார் கூட நபிமார்கள் யாவரும் வாழி நல்ல
அலியார் பெற்ற ஹஸனும் ஹுஸைனும் வாழி

திங்க ளொளிமாறும் தீனுள்ளபேர்களும் வாழி மிக
பொங்கும் பெரியவர் பூவையர் யாவரும் வாழி
பெண் புத்திமாலையைப் பேசிப் படித்தோரும் வாழி நாளுங்
கண்ணுற்றுக் கண்டு கருத்தாய் நடந்தாரும் வாழி

...............பெண் புத்தி மாலை முற்றிற்று...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

# பெண்புத்தி மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org